1979 மார்ச் 7]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: உங்களைப்பற்றி ஒன்றும் சொல்லவில்லை. ஆகவே நீங்கள் தன்னிலை விளக்கம் கொடுக்க முடியாது, தயவு செய்து உட்காருங்கள்.

திரு. மு. அரங்கநாதன்: அமைச்சர் அவர்கள் சொன்னது தவறானது ....

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்; ரூல் 41-ன் கீழ் யார் தீர்மானம் கொடுத்திருக்கிறார்களோ அவர்கள் மட்டும் தான் சில விளக்கங்களை கேட்க முடியும், மற்றவர்கள் பேச முடியாது. அமைச்சர் அவர்கள் சொன்னது தவறு என்றிருந்தால், அமைச்சர் தவறாக சொன்னார் என்று அவர்கள் மீது உரிமைப் பரச்சினையை எழுநிக்கொடுங்கள், அதைப்பற்றி பின்னால் பார்க்கலாம். ஆனால் இப்போது நீங்கள் எழுந்து பேச முடியாது. உட்காருங்கள்.

திரு. கூத்தகுடி ச. சண்முகம்: நான் பேசவேண்டும் என்று சொல்லியிருந்தேன். நேற்று முன்தினமும் பேச முடியவில்லை. நேற்றும் பேசுவதற்கு நேரம் கிடைக்கவில்லை.......

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இன்றைக்கு பேசப் போகிறீர்கள், ஆகவே அதைப்பற்றி இப்போது கேட்க வேண்டியதில்லை.

6. அரசினர் சட்ட முன்வடிவு.

தனியார் வனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்டமுன்வடிவு, 1979

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, "தமிழ்நாடு 1979 ஆம் ஆண்டு தனியார் வாகனங்களைப் பாதுகாத்தல் (கன்னியாகுமரி மாவட்டத்திற்கு நீட்டித்தல்) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்".

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன்: தலைவர் அவர்களே, இச்சட்ட முன்வடிவை நான் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: சட்ட முன்வடிவு அறிமுகப்படுத்தப் பெற்றிருக்கிறது.